DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

**அ.சா. 1/ முருகேஸ்வரி / 06.10.2024**

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

12ம் தேதி விடியற்காலை 5.00 மணிக்கு தாலுகா காவல்நிலையத்தில் புகார்தெரிவித்தேன். புகார்கொடுக்க நானும் எனது அக்கா கணவர் கணேசனும் சென்றிருந்தோம். போலீசார் என்னை விசாரிக்கும்போது பள்ளிக்கு செல்வதற்காக என்னை அழைத்துச்சென்ற விவரத்தை சொல்லவில்லை. எனது அக்கா கணவர் பைக்கில் திருவாதவூர் செல்லும்போது இருவரம் சேர்ந்து சென்றார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அன்றைய தினம் எனது கணவரை தேடிப்பார்த்தேன் போன் செய்த போது போன் சுவிட்ச் ஆப் என வந்தது என்ற விவரத்தையும் எனது தம்பியிடம் சொன்னேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 10.00 மணிக்கு காணாமல் போனபிறகு எனது அக்கா கணவருக்கு நான் போன் செய்து கேட்டேன். அவர் என்னிடம் எனது கணவர் முன்னமே சென்றுவிட்டார் என்றும் தான் நாடகம் பார்த்துவிட்டு வந்ததாக சொன்னார். எனது கணவர் எத்தனை மணிக்கு திருவாதவூரிலிருந்து கிளம்பினார் என்ற விவரம் நான் கேட்கவில்லை.

எனது அக்கா கணவரிடம் பேசும்போது இரவு 10.00 மணியிருக்கும். அப்போது கணேசன் திருவாதவூரில் தான் இருந்தார். மறுநாள் காலை 5.00 மணிக்குதான் கணேசனிடம் போன் செய்து பேசினேன். இருவரும் சேர்ந்து தேடுவோம் என அவர் சொன்னார். மறுநாள் காலை எனது கணவர் காணவில்லை என்ற விவரம் ஊரில் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வடக்கு தமராக்கி தெற்கு தமராக்கி என 2 பஞ்சாயத்து உள்ளது என்றால் சரிதான். மக்கள் பெருவாரியானவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் அனைவருமே எனது உறவுமுறை தான் என்றால் சரிதான்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:08 +0530

11ம் தேதி என் கணவரை தேடிப்பார்த்துவிட்டு 12ம் தேதி புகார்கொடுத்தேன். முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் நான் காவல்துறையினர் என்னை விசாரிக்கும்போதும் சொன்னேன். எனது கணவர் பயன்படுத்தி வந்த பைக் எனது பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனது அக்கா கணவர் கணேசன் பெயரில் பைக் இல்லை. சாட்சி மாரியப்பன் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்தான். 13ம் தேதி தான் என் கணவரை பார்த்த விவரத்தை என்னிடம் சொன்னார். என் கணவர் காணமால் போன விவரம் அவருக்கு 10ம் தேதியே தெரியும் என்றால் சரிதான். மாரியப்பன் மற்றும் சங்கர் சொல்லித்தான் எனது கணவர் இறந்துகிடக்கும் விவரம் எனக்கு தெரிந்தது. 13ம் தேதி காலை 10மணிக்கு சொன்னார்கள். மாலை 6.00 மணிக்கு நான் அங்கு சென்று பார்த்தேன். நான் அங்கு சென்று பார்த்தபோது போலீசார் அங்கு இருந்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு வந்த பிறகு எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். சஞ்சை நகரிலேயே போலீசார்எ ன்னிடம் புகார்வாங்கினார்கள். எனது அக்கா கணவர் தான் புகார் எழுதிக்கொடுத்தார். சம்பவயிடத்தில் சுமார் 100 பேர் இருந்திருப்பார்கள். சம்பவயிடத்திற்கு அருகில் சுமார் 10வீடுகள் இருக்கும்.

சம்பவம் நடந்த மேற்குப்பக்கமும் வடக்குப்பக்கமும் கருவேலங்காடு என்றால் சரிதான். மேலூர் சிவகங்கை ரோட்டிலிருந்து சம்பவயிடத்திற்கு செல்லவேண்டும் என்றால் 500மீ செல்லவேண்டும் என்றால் சரிதான். அந்த இடம் ஒற்றையடி பாதை என்றால் சரிதான். புகாரில் எனது கணவர் வெளிநாட்டிலிருந்து வந்து 5மாதங்களாவதாக சொல்லியுள்ளேன். நான் பார்த்தபோது எனது கணவரின் கழுத்தில் காவி வேஷ்ட்டி கட்டப்பட்டிருந்தது. முடிச்சுப்போட்டிருந்தது. சுருக்கு போடப்பட்டிருந்தது. அந்த வேஷ்டியின் மீதித்துணி ஜன்னலில் கட்டப்பட்டிருந்தது என்றால் நான் கழுத்தை மட்டும்தான் பார்த்தேன்.

எனது கணவரின் பிரேதத்தை அரசுமருத்துவமனைக்கு மாலை 6.00 மணிக்கு கொண்டுசென்றார்கள். போலீசார் என்னை சம்பவயிடத்தில் வைத்து மட்டுமே விசாரித்தர்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை. போலீஸ் தான் என்னை விசாரித்தார்கள். ஆஜர்எதிரி 1 எனது கணவரின் உறவினர் கிடையாது. எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். நிகழ்விற்கு முன்பு நான் 2ம்எதிரியை சிவகங்கையில் போகவரும்போது பார்த்திருக்கிறேன். சம்பவத்திற்கு முன்பு அவரை காந்திவீதியில் ஆட்டோ ஓட்டும்போது பார்த்திருக்கிறேன்.

நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் என் கணவரை பார்க்கவில்லை என்றும் போலீசார் வழக்கிற்கு ஏதுவாக காயத்தின் தன்மைக்கேற்ப என்னிடமிருந்து புகார்

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.11.06 15:40:16 +0530

பெற்றுக்கொண்டு வழக்கு பதிவுசெய்தார்கள் என்றும் நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் மருத்துவமனைக்கு நேரடியாக சென்றேன் என்றால் சரியல்ல.

**அனுமதியுடன் முதல்விசாரணை:**

(முந்தைய முதல்விசாரணையின்போது நீதிமன்றத்தில் வழக்குசொத்துக்கள் நீதித்துறைநடுவரிடமிருந்து கிடைக்கப்பெறாததால் சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யயியலவில்லை. தற்போது வழக்குச்சொத்துக்கள் வரப்பெற்றது எனவே சாட்சியை முதல்விசாரணை செய்ய அரசுவழக்கறிஞர் அனுமதி கேட்டதன்பேரில் முதல்விசாரணை அனுமதிக்கப்பட்டது.)

எனது கணவரின் துணிகளை என்னால் அடையாளம் காட்டமுடியும் **சா.பொ.1** எனது கணவரின் கழுத்தில் சுற்றப்பட்டிருந்து காவிநிற வேட்டி. **சாபொ.2** அரக்குகலர் உள்ளாடை. எனது கணவரின் கருப்புக்கலர் செருப்பு **சாபொ.3** ஒரு ஜோடி. எனது கணவரின் வண்டி TN63AB1612 கருப்புநிற வண்டி என் வசம் உள்ளது. அதன் புகைப்படம் என்னிடம் காண்பிக்ககூடிய ஆவணம் அந்த வண்டி **சா.பொ.4**. சா.பொ.1 நான் பார்க்கும்போது வேஷ்டி 2 துண்டாக எனது கணவரின் கழுத்தில் கட்டப்பட்டிருந்தது. **சா.பொ.5** வண்டியின் சாவி. **சா.பொ.6** எனது கணவரின் செல்போன்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

எனது கணவர் கழுத்தில் கட்டப்பட்டிருந்து வேஷ்டியை நான் பிரித்துப்பார்க்கவில்லை. எனது கணவர் திருவாதவூர் செல்லும்போது அங்கு மாட்டு வண்டி பந்தையத்தில் 2 நபர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையில் எனது கணவருக்கு தொடையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது என்றும் அதன்தொடர்ச்சியாக எனது வீட்டிற்கு வந்தால் அவனமானமாகிவிடும் என்ற காரணத்திற்காக 1ம் எதரியின் வீட்டின் வெளிப்புற ஜன்னலில் இருந்து தூக்கு மாட்டிக்கொண்டார் என்றும் உயரம் குறைவாக இருந்ததால் முட்டி போட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 47/2022

**அ.சா. 2 / மாரியப்பன் / 06.10.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

சஞ்சை நகரில் கூலி வாங்க மதுரை பாண்டி வீட்டிற்கு சென்றேன். மேலூர் ரோட்டிலிருந்து அவரது வீடு உள்ளே கொஞ்சதூரம் தள்ளி உள்ளது. அவரது வீட்டிலிருந்து அன்னலட்சுமி வீடு கிழக்குபுரமாக அமைந்துள்ளது. பாண்டியன் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது. நான் அங்கு நடந்து சென்றேன். இறந்துபோனவர் எப்படி வந்தார் என்று நான் பார்க்கவில்லை. இறந்துபோனவர் எப்படி சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் போகும்போது 1ம் எதிரிக்கும் இறந்துபோன போதுராஜ் என்பவருக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது வீட்டிற்கு வெளியே நின்று இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் ஆசாரி வேலை பார்க்கிறேன். மதுரை பாண்டி எந்த வேலைக்கும் செல்லவில்லை. வீட்டில் தான் இருந்தார். அவர் வீட்டில் வேலை பார்த்ததற்கு சம்பளம் வாங்க சென்றேன்.

மேற்கண்ட விவரங்களை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனக்கு இறந்துபோனவர் காணாமல் போன விவரம் 10ம் தேதி தெரியாது. 13ம் தேதி தான் அவர் இறந்த விவரம் தெரியும். அப்போது தான் நான் அவரது மனைவியிடம் பார்த்தவிவரத்தை சொன்னேன். தமராக்கியில் தான் நான் பார்த்தவிவரத்தை இறந்துபோனவர் மனைவியிடம் சொன்னேன். 13ம் தேதி இறந்த தகவல் தெரிந்ததும் மாலை 6.00 மணியளவில் அசா.1யிடம் தகவல் சொன்னேன். நான் பிரேதத்தை சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தேன். ரோட்டோரம் பாதையில் கம்பி வேலை தயாரிக்கும் கம்பெனியும் கல்லுக்கால்தயாரிக்கும் கம்பெனியும் உள்ளது என்றால் சரிதான். அங்கு சிசிடிவி கேமரா உள்ள விவரம் எனக்கு இறந்ததற்கு பிறகு தெரியும்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:37 +0530

நான் ஆசாரி பார்க்கவில்லை என்றும் சம்பவயிடத்திற்?கு செல்லவில்லை என்றும் ஆஜர் எதரியும் இறந்த நபரும் வாக்குவாதம் செய்ததாக கூறுவது பொய் என்றும் வழக்கிற்கு சாட்சி வேண்டும் என்பதற்காக போலீசார் என்னை இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றும் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாடசியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு இறந்துபோனவர் பைக்கில் சென்றாரா நடந்து சென்றாரா என்ற விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:44 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.47/2022

**அ.சா. 3/ அசோக்மேத்தா / 06.10.2024**

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் புகார்தாரரின் மாமா. எனது சொந்த ஊர் குமாரபட்டி. குமாரபட்டிக்கும் தமராக்கிக்கும் 3கிமீ தூரமிருக்கும். 2நாட்கள் நாங்கள் புகார்தாரரின் கணவரை தேடிவந்தோம். கிடைக்காததால் தாலுகா காவல்நிலையத்தில் புகார்தெரிவித்தோம். தனிநபர்கள் நான் விசாரித்தவகையில் இறந்துகிடந்த விவரம் எனக்கு சொன்னார்கள். சம்பவயிடத்திற்கு நான் முருகேஸ்வரி, கணேசன் ஆகியோர் சென்றோம். அது அல்லாமல் ஊர்காரர்களும் வந்தார்கள். நாங்கள் தான் முதன்முதலில் சம்பவயிடத்திற்கு சென்றோம். அதன்பிறகு தான் கூட்டம் வந்தது. பிரேதம் அழுகிய நிலையில் இருந்ததால் நாங்கள் சந்தேகப்பட்டுதான் அங்கு சென்றோம். அவர் உடுத்தியிருந்த வேஷ்டியை வைத்துதான் அடையாளம் கண்டோம். பார்த்தபிறகு காவல்நிலையம் சென்று புகார் தெரிவித்தோம். அதன்பின்னர் தான் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தர்கள்.

9.30 , 10.00 மணிக்கு பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். சம்பவம் நடந்த வீட்டின் அமைப்பு தெற்கு வாசல் என்றால் சரிதான். மேற்குபுரம் மாடிக்கு செல்லும் படியும் அதை ஒட்டினார் போல் பாத்ரூம் உள்ளது. அதை ஒட்டி வீட்டின் ஜன்னல் 2க்கு2 அளவில் உள்ளது என்றால் சரிதான். ஜன்னலை ஒட்டியது போல் பிரேதம் குப்புற படுத்தார் போல் இருந்தது. நான் போகும்போது துர்நாற்றம் வீசியது. 100, 150 அடி அளவிற்கு சுற்றியும் அந்த நாற்றம் வீசியது. புகாரை புகார்தாரர் சொல்லச்சொல்ல நான் எழுதிக்கொடுத்தேன். அசா.2 மாரியப்பன் எங்களிடம்ட சம்பவத்தன்று முதல் எதிரியும் இறந்துபோனவரும் சண்டையிட்டுக்கொண்டிருந்ததை பார்த்ததாக சொன்னார். அதே போல் ஏற்கனவே முதல் எரிக்கும் இறந்துபோனவருக்கும் தகாதஉறவு இருந்ததால் அதனடிப்படையில் எதிரிக்கு எதிராக புகார்தெரிவித்தேன். நான் சொல்வதுபோல் சம்பவம்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:51 +0530

நடைபெறவில்லை என்றும் 10.03.2020 அன்று காலை 10.00 மணிக்கு மதுரை மீனாட்சிஅம்மன் கோவிலுக்கு எதிரிகள் இருவரும் சென்றுவிட்டு மறுநாள் மதுரை ரயில்நிலைய்திலிருந்து சென்னை சென்று மைசூர் மூகாம்பிகை கோவிலுக்கு சாமி கும்பிட சென்றார்கள் என்றும் அவர்கள் வீட்டை ஒட்டி பிரேதம் இருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக புகார் தரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் காவல்நிலையத்தில் வைத்து புகார்தரவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து போலீசாரால் வழக்கிற்கு ஏற்ப தயாரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. முதல்எதிரிக்கும் இறந்துபோனவருக்கும் தகாதஉறவு கிடையாது என்றும் எனது அக்கா மகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:40:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.47/2022

**அ.சா.4 / ரவிக்குமார் / 06.10.2024**

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் புகார்தாரரின் சின்னம்மா மகன். கணேசன் எனது அக்கா கணவர். கணேசன் சொல்லாமல் வந்துவிட்டார். அன்னலட்சுமி எனது ஊரைச்சேர்ந்தவர். சம்பவத்திற்கு முன்னர் 2ம் எதிரியை நான்ஆட்டோ ஓட்டுவார். சிவகங்கைக்கு வரும்போகும்போது பார்த்திருக்கிறேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் 2ம் எதிரியை எனக்கு தெரியாது என்றும் எனது ஊரைச்சேர்ந்தவர் 2ம் எதிரி என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:41:03 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை